**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் - O.S.No.65/2012 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.E.வெங்கட்ராமன், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: ஷேக் முகமது நிசார் | தொழில்: |
| த/பெ.: | மதம்: |
| கிராமம்: | ஜாதி: |
| வயது: | வட்டம்: காஞ்சிபுரம் |

**முதல் விசாரணை: - 11.01.2021**

நான் இந்த வழக்கின் 2, 3 வாதிகளின் அதிகார முகவர். இன்று வாதிகள் சார்பாக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 18 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவைகளை வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய அவகாசம் வேண்டுகிறேன்.

(ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

சாட்சி (அதிகார முகவர்) ஆஜர்.

வாதி, 2ம் பிரதிவாதி மற்றும் 3, 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள 3 முதல் 6 மற்றும் 16 முதல் 18 ஆவணங்கள் ஜெராக்ஸ் நகல்கள் என்றும், அதிகார முகவருக்கு வழங்கப்பட்ட அதிகார பத்திரத்திற்கு முந்தைய ஆவணங்கள் குறித்து அதிகார முகவர் சாட்சியம் அளிக்க இயலாது என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதுடன், நகல் ஆவணங்களுக்குரிய சான்றிட்ட நகல்கள் பெற்று தாக்கல் செய்வதற்கான குறிப்பாணை தாக்கல் செய்வதன் மூலம் ஆவணங்களை குறியீடு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. வாதி தரப்பு வழக்கறிஞர் சம்பந்தப்பட்ட அசல் கிரய ஆவணங்கள் பிரதிவாதி வசமே உள்ளது எனவும், ஆட்சேபனை தெரிவிக்கப்படும் ஆவணங்கள் அரசாங்க ஆவணங்கள் என்றும், ஜெராக்ஸ் நகல்களை குறியீடு செய்யலாம் என்றும், சான்றிட்ட நகல்கள் பெற்று பின்னர் தாக்கல் செய்வதாக (Substitute) தெரிவித்ததன் பேரில் ஆட்சேபனையுடன் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள

1. 22.02.2006 தேதியிட்ட அதிகார பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1.
2. 04.05.1965 தேதியிட்ட கிரய பத்திரம் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.2.

(பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களுக்குரிய அசல் ஆவணங்கள் நீதிமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு, மீண்டும் வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வசம் ஒப்படைக்கப்பட்டது).

3. 22.05.2000 தேதியிட்ட இறப்பு சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.3.
4. 31.03.2004 தேதியிட்ட O.P.No.269/2004ன் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.4.
5. O.P.No.269/2004ன் தீர்ப்பு ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.5.
6. 15.12.1999 தேதியிட்ட இறப்பு சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.6.
7. 15.09.2000 தேதியிட்ட கிரய பத்திர எண்.3291/2000 ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.7.
8. 15.09.2000 தேதியிட்ட கிரய பத்திர எண்.3293/2000 ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.8.
9. 15.09.2000 தேதியிட்ட கிரய பத்திர எண்.3296/2000 ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.9.
10. 15.09.2000 தேதியிட்ட கிரய பத்திர எண்.3298/2000 ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.10.
11. 09.06.2003 தேதியிட்ட கிரய பத்திர எண்.2599/2003 ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.11.
12. 09.06.2003 தேதியிட்ட கிரய பத்திர எண்.2600/2003 ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.12.
13. 09.06.2003 தேதியிட்ட கிரய பத்திர எண்.2601/2003 ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.13.

14. 09.06.2003 தேதியிட்ட கிரய பத்திர எண்.2602/2003 ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.14.

15. 23.07.2004 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.15.

16. 18.08.2000 தேதியிட்ட அதிகார பத்திரம் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.16.

17. 20.08.2004 தேதியிட்ட புகார் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.17.

18. 27.09.2004 தேதியிட்ட புகார் குற்ற எண்.51/2004 ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.18.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:-**

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

வா.சா.ஆ.1 அதிகார பத்திரம் 2006ல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட 2012ம் ஆண்டில் வா.சா.ஆ.1 அதிகார பத்திரம் நடைமுறையில் இருந்ததா என்றால் ஆமாம். நான் 1, 2 வாதிகளின் அதிகார முகவர் என்ற அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும், 1, 2 வாதிகள் தனிப்பட்ட முறையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றும் சொன்னால் சரிதான். 1, 2 வாதிகளின் வயது என்னவென்றால் ஆவணங்களை பார்த்து தான் சொல்லமுடியும். 1, 2 வாதிகளுக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கான மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை 1, 2 வாதிகளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் என்றால் வழக்கை நடத்துவதற்கு என்னிடம் பொறுப்பை ஒப்படைத்துள்ளார்கள். 2006லேயே அதிகார பத்திரம் கொடுத்த நிலையில், இந்த வழக்கில் 1, 2 வாதிகளுக்காக 2018ல் வழக்கை நடத்துவதற்கு மனு தாக்கல் செய்ததற்கான அவசியம் என்னவென்றால் உடல்நலம் சரியில்லாததால் தாக்கல் செய்தேன். 2006ம் ஆண்டுக்கு முன்பு நடந்த சம்பவங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை 2ம் பிரதிவாதி வேலாயுதம் கிரயம் செய்துள்ள விவரம் எனக்கு எப்பொழுது தெரிய வந்தது என்றால் 2005ல் தெரிய வந்தது. இந்த வழக்கில் வாதிகள் தாக்கல் செய்துள்ள 18 ஆவணங்களை எல்லாம் படித்து பார்த்து விவரங்கள் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். 2015ல் வாங்கப்பட்ட வா.சா.ஆ.15 வில்லங்க சான்றிதழில் 2ம் பிரதிவாதியின் கிரய விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.10 கிரய ஆவணங்களை படித்து பார்த்துள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.10 கிரய ஆவணங்களில் ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் பெங்களூரில் வசிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.10 வரையிலான கிரய ஆவணங்கள் 2000ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டதாக உள்ளது என்றால் ஆவணங்கள் அப்படி தான் இருக்கிறது. ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் முதல் பிரதிவாதி கோபி என்பவருக்கு அதிகார பத்திரம் கொடுத்து கிரயம் கொடுக்கப்பட்டதாக வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.10 வரையிலான கிரய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் முதல் பிரதிவாதி கோபி என்பவருக்கு கொடுத்த பொது அதிகார பத்திரம் தான் வா.சா.ஆ.16 என்றால் சரிதான். வா.சா.ஆ.16 அதிகார........

பத்திரத்தில் ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் பெங்களூரில் இருந்து வந்து ஓட்டல் வுட்லாண்டில் தங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.16 அதிகார பத்திரம் 2000ல் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள ஜெராக்ஸ் நகல் ஆவணங்களில் சிவராமன் என்பவர் நகல் கோரி விண்ணப்பித்து வாங்கியதாக காணப்படுகிறது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி 3, 4 பிரதிவாதிகளுக்கு 2003ம் ஆண்டில் தாவா சொத்தினை கிரயம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். 2003 மற்றும் 2004ல் ஏற்பட்ட கிரய பத்திரங்கள் பற்றிய விவரம் எனக்கு 2005ம் ஆண்டில் தெரிய வந்தது. 2005ம் ஆண்டில் கிரய விவரம் தெரிந்த நிலையில், எனக்கு பவர் கொடுத்த பிறகு நான் நடவடிக்கை ஏதும் எடுத்தேனா என்றால் எல்லா நடவடிக்கையும் நான் தான் எடுத்தேன். இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேன். அசல் பத்திரங்கள் தொலைந்து விட்டதாகவும், அது குறித்து செய்திதாளில் விளம்பரம் கொடுத்து யாரும் உரிமை கோராததால் கிரயம் வாங்கியதாக கிரய பத்திரங்களிலும், மற்றும் எதிர் வழக்குரையிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி வேலாயுதத்தின் கிரயங்கள் நல்லெண்ணத்தின் அடிப்படையில் வாங்கப்பட்டது என்றால் அப்படி இருக்க வாய்ப்பில்லை. 2ம் பிரதிவாதி வேலாயுதத்தின் கிரயங்கள் குறித்து 2004லேயே வாதிகளுக்கு தெரியும் என்றால் சரிதான். ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் எந்த வருடம் இறந்து போனார் என்றால் 1978. அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. ஆவணங்களை பார்த்து தான் தெரிந்து கொண்டேன். வாதிகளின் வழக்குப்படி ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் C.I.T. காலனி, மந்தவெளியில் தான் வசித்து வந்தார் என்றுள்ளது என்றால் சரிதான். ஆன்ரூஸ் சேவியர் பாக்கியத்தின் உடல் எங்கு அடக்கம் செய்யப்பட்டு கல்லறை அமைக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. St.Mary's ரோட்டில் சர்ச் உள்ளதா என்றால் உள்ளது. ஆன்ரூஸ் சேவியர் பாக்கியத்தின் உடல் St.Mary's ரோட்டில் சர்ச்சில் அடக்கம் செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக கிறிஸ்துவர்கள் இறந்து போனால் அடக்கம் செய்யும் இடத்தில் ஒரு சான்றிதழ் கொடுப்பது வழக்கம் என்றால் தற்போது கொடுக்கிறார்கள். அந்த காலகட்டத்தில் கொடுத்தார்களா என்பது எனக்கு தெரியாது. ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் இறந்து போனது 1978ல். ஆனால் அவரது இறப்பு 17.05.2000ல் பதிவு செய்யப்பட்டதாக வா.சா.ஆ.3ல் காணப்படுகிறது என்றால்

சரிதான். வா.சா.ஆ.3 இறப்பு சான்றிதழ் யார் வாங்கினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் பெங்களூரில் வசித்து வந்தார் என்றும், அவர் எந்த காலத்திலும் சென்னையில் வசிக்கவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் சென்னையில் வசிக்கவில்லை மற்றும் இறக்கவில்லை என்றால் அது தவறு. வா.சா.ஆ.3 இறப்பு சான்றிதழ் குறித்து மாநகராட்சி அதிகாரிகளை விசாரித்தால் தெரிய வரும் என்றால் சரிதான். ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் இறந்ததாக 22.05.2000ல் பெறப்பட்ட தவறான சான்றிதழின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிகளை 2005ம் ஆண்டில் இருந்து எனக்கு தெரியும்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

வா.சா.ஆ.3 ஆவணத்தில் ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் நம்பர்.4, 9வது ட்ரஸ்ட் க்ராஸ் தெரு, சென்னை - 28ல் வசித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது அவரது சொந்த வீடு. வா.சா.ஆ.2 ஆவணத்திலும் ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் 1965ல் அதே விலாசத்தில் தான் வசித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் அதே வீட்டில் வசித்தார் என்பதற்கு வாக்காளர் பட்டியல் மற்றும் மாநகராட்சி ஆவணம் உள்ளிட்ட வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த வாக்காளர் பட்டியல் மற்றும் மாநகராட்சி ஆவணம் உள்ளிட்ட வேறு ஆவணங்களை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.18 ஆவணம் முதல் வாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ஆவணத்தில், ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் 1975ல் இறந்து போனதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தற்போது ஆவணத்தை பார்த்து தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ.3 ஆன்ரூஸ் சேவியர் பாக்கியத்தின் இறப்பு சான்றிதழ் போலியான ஆவணம் என்றும், தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் பற்றி படித்து பார்த்து தான் தெரியும் என்றும், அதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும் சொன்னால் சரிதான். அதன் அசல் என்னிடம் தான் உள்ளது. அந்த அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால் பயந்து கொண்டு தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.6ல் குறிப்பிடப்பட்டுள்ள "Mrs.கிருஷ்ணராஜ்" யார் என்றால் உறவினர். வாதிகள் தாக்கல் செய்த வழக்குரையை நான் படித்து பார்த்திருக்கிறேன். அதில் பத்தி 9ல், மரியா கிறிஸ்டினா ஆன்ரூஸ் சேவியர் பாக்கியத்தின் சகோதரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மரியா கிறிஸ்டினா என்பவரின் கணவர் தான் இந்த வழக்கை தாக்கல் செய்த முதல் வாதி ஜோசப் கிறிஸ்டியன் கிருஷ்ணராஜ் என்றால் சரிதான். வா.சா.ஆ.6ல் குறிப்பிடப்பட்டுள்ள நபர் தான் ஜோசப் கிறிஸ்டியன் கிருஷ்ணராஜின் மனைவியாக இருக்கலாம் என்றால் ஆமாம். வா.சா.ஆ.6லும் நம்பர்.4, 9வது ட்ரஸ்ட் க்ராஸ் தெரு, சென்னை - 28 என்ற விலாசம் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 இறப்பு சான்றிதழில் 14.07.1987ல் இறந்து போன நபரின் இறப்பு 18.07.1987ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6ல் குறிப்பிடப்பட்டுள்ள

நபரும் அதே விலாசத்தில் தான் குடியிருந்தார் என்பதற்கு அவருடைய வாக்காளர் பட்டியல் மற்றும் மாநகராட்சி ஆவணம் உள்ளிட்ட வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆன்ரூஸ் சேவியர் பாக்கியத்தின் தகப்பனார் பெயர் ஆன்டனி சேவியர் பாக்கியம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆன்டனி சேவியர் பாக்கியத்திற்கு ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் மற்றும் மரியா கிறிஸ்டினா ஆகிய இருவர் தான் வாரிசுகள் என்பதற்கு வாரிசு சான்றிதழ் பார்த்திருக்கிறேனா என்றால் உயர்நீதிமன்றத்தின் Letter of Administration-யை பார்த்திருக்கிறேன். 1, 2 வாதிகள் இறந்துபோன மரியா கிறிஸ்டினாவின் வாரிசுகள் என்பதற்கான வாரிசு சான்றிதழை பார்த்திருக்கிறேனா என்றால் உயர்நீதிமன்றத்தின் Letter of Administration-யை பார்த்திருக்கிறேன். வா.சா.ஆ.4 ஆவணம் தான் Letter of Administration-க்காக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு என்றால் சரிதான். அந்த Letter of Administration-யை தாக்கல் செய்த வழக்கறிஞர் தான் இந்த வழக்கையும் தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

2006ம் ஆண்டிற்கு முந்தைய விவரங்கள் பற்றி ஆவணங்கள் வாயிலாக எனக்கு தெரியும். இந்த வழக்கை தாக்கல் செய்த 2 மற்றும் 3வது வாதிகள் இன்று வரை எனது தொடர்பில் உள்ளார்கள். அதிகார பத்திரம் வாங்கியதில் இருந்து என்னுடைய தொடர்பில் இருக்கிறார்கள். ஆன்டனி சேவியர் பாக்கியம் இறந்து 26 வருடங்கள் கழித்து Letter of Administration தாக்கல் செய்தது ஏன் என்று கேட்டேன். 2000ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்ட போர்ஜரி பத்திரம் காரணமாக எங்களுடைய உரிமையை நிலைநாட்ட Letter of Administration தாக்கல் செய்ததாக சொன்னார்கள். வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள உத்தரவின் படி கணக்குகளை சமர்ப்பித்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்துக்களை Letter of Administration உத்தரவின் படி வாதிகள் சுவாதீனம் எடுத்து கொண்டார்களா என்றால் இந்த வழக்கு போடுவதற்கு முன்பாகவே சுவாதீனம் அவர்களிடத்தில் இல்லை. வாதிகள் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் பெயர் மாற்றம் செய்யப்பட்டதா என்றால் தெரியவில்லை. என்னுடைய தொழில் Steel Manufacturing மற்றும் Construction. வா.சா.ஆ.1 அதிகார பத்திரத்தில் நான் ரூபாய் 10 லட்சம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் சிரமத்தில் இருந்ததால் கொடுத்தேன். வா.சா.ஆ.5 ஆவணத்தில், தாவா சொத்துக்களை விற்பதற்கோ, அடமானம் போடுவதற்காகவோ, பரிவர்த்தனை செய்வதற்கோ அல்லது வேறு எதற்காகவும் நீதிமன்றத்தில் அனுமதி பெற வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு அதிகார பத்திரம் கொடுப்பதற்காக நீதிமன்றத்தில் அனுமதி வாங்கினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரிட் மனு 9223/2015ல் குறிப்பிட்டுள்ள மனுதாரர்களுக்கு தாவா சொத்துக்களை கிரயம் செய்தோமா என்றால் கிரயம் செய்ய முயற்சி செய்தோம். கிரயம் செய்ய முயற்சி செய்த போது இந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அதனால் வேளச்சேரி சார் பதிவாளர் அந்த கிரய பத்திரத்தை பதிவு செய்ய மறுத்து விட்டார் என்றால் சரிதான். அவ்வாறு பதிவு செய்ய மறுத்த பிறகு தான் எனது இந்த வழக்கின் வழக்கறிஞர் மூலமாக ரிட் மனு 9223/2015யை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

06.03.2015ல் எழுதப்பட்ட கிரய பத்திரம் எவ்வளவு தொகைக்கு எழுதப்பட்டது என்பது பற்றி தெரியாது. இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால் மேற்படி ரிட் மனுவில் நாங்கள் கோரியிருந்த கோரிக்கை அனுமதிக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த ரிட் மனு 9223/2015ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் ஜெராக்ஸ் நகல் **பி.சா.ஆ.1.** வா.சா.ஆ.18 முதல் தகவல் அறிக்கையின் முன்னிலைக்கு காவல் துறையினர் நடவடிக்கை எடுத்தனர். என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்ற விவரம் எங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும், அதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் அது பற்றி வழக்கறிஞரிடம் தான் கேட்க வேண்டும். 2000ல் 2ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை கிரயம் பெற்று 2003 வரை அவருடைய அனுபவத்தில் இருந்து, அதன் பிறகு 3, 4 பிரதிவாதிகள் கிரயம் பெற்று அதிலிருந்து தற்போது வரை அவர்களுடைய அனுபவத்தில் தான் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். அதனால் சுவாதீனம் கோரி வழக்கு தாக்கல் செய்யாமல் உறுத்து கட்டளை மட்டும் கோரி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி கிரயம் பெற்ற 3 வருடங்களுக்குள் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டுமென்றும், 3 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு காலவரையறை சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. பிளாட் எண்கள்.41, 42, 45, 46 ஆகியவற்றின் நீள, அகல அளவு விவரங்கள் பற்றி தெரியுமா என்றால் ஆவணங்களை பார்த்து தான் சொல்லமுடியும். வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களில் தனித்தனி பிளாட்களுக்கான எண்களும், அதில் பிளாட்களுக்கான அளவைகளும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்த வாதிகளை நான் விசாரிக்க போவதில்லை. வாதிகள் நீதிமன்றத்திற்கு உண்மை தெரிந்து விடும் என்பதால் அவர்கள் வருவதை தவிர்த்து விட்டு, 2006க்கு முன்பு நடந்த சம்பவங்களை சாட்சியமாக நான் அளிக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. நானும், வாதிகளும், முதல் பிரதிவாதி கோபியும் சேர்ந்து கூட்டு சதி செய்து தவறான ஆவணங்கள் தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதால், இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொன்னால் முதல் பிரதிவாதி கோபியும், 2வது பிரதிவாதி வேலாயுதமும் உறவினர்கள். கூட்டு சதி செய்து தவறான ஆவணங்கள் தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாக சொல்வதை முற்றிலும் மறுக்கிறேன். முதல்

பிரதிவாதி கோபியும், 2வது பிரதிவாதி வேலாயுதமும் உறவினர்கள் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இது வரை தாக்கல் செய்யவில்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க 3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**

**3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இதே வழக்கின் வாதிகள் 2005ம் ஆண்டில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு விவரம் தெரியும். அந்த வழக்கு எண்.215/2005 அந்த வழக்கின் வழக்கறிஞர் திரு.சிவராமன். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரப்பட்டுள்ளதோ அதே பரிகாரங்கள் தான் மேற்படி சிவில் வழக்கு எண்.215/2005லும் கேட்கப்பட்டது என்றால் சரிதான். சிவில் வழக்கு எண்.215/2005 வழக்கில் 2012ம் ஆண்டில் உரிய நீதிமன்றத்தை அணுகுமாறு உத்தரவிடப்பட்டு, அந்த வழக்கு இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். 2006ல் எனக்கு வழங்கப்பட்ட பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் ஏன் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ஏற்கனவே 2005ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததால் நான் புதிதாக வழக்கு தாக்கல் செய்யவில்லை. 2012ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் விளம்புகை பரிகாரத்திற்காக உயர்நீதிமன்றத்தில் வழக்கும், சுவாதீனம் கோருகின்ற கோரிக்கையை பொறுத்து இந்நீதிமன்றத்திலும் வழக்கு நடத்துவதற்காக நாங்கள் கோரியிருந்த கோரிக்கை ஏற்கப்படவில்லை என்றால் சரிதான். 2005ம் ஆண்டில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண்.215/2005 குறித்து தெரிந்து தான் அதிகார பத்திரம் என்னால் பெறப்பட்டது என்றால் சரிதான். அதிகார பத்திரம் ஷரத்து 7ல் விற்பனை உள்ளிட்ட எல்லா உரிமைகளும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மேற்படி அதிகார பத்திரத்தை இரு வாதிகள் எழுதி கொடுத்தார்கள். அந்த இரு வாதிகளும் தற்போது உயிருடன் இருக்கிறார்கள். மேற்படி வாதிகள் இருவரும் சத்திய பிரமாண வாக்குமூலம் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறார்களா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்வார்கள். அதிகார பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் வாதிகள் தற்போது வசிக்கவில்லை. வேறு இடத்தில் வசிக்கிறார்கள். அந்த வீடு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. வாதிகள் வசிக்கின்ற வீட்டிற்கான முகவரி அடங்கிய ஆதாரம் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். 2006ல் எழுதப்பட்டுள்ள அதிகார பத்திரத்தில் மறுபயன் (consideration) ரூபாய் பத்து லட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.18 வாதிகளால் 2004ல் கொடுக்கப்பட்டுள்ள புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் சொத்தின் மதிப்பு ரூபாய் 45 லட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2006ல் தாவா சொத்தின் மதிப்பு சுமாராக

எவ்வளவு இருக்கும் என்று எனக்கு தெரியாது. நான் திட்டமிட்டு, வழக்கு தாக்கல் செய்வதற்காக இந்த ஆவணங்களை தயார் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 அதிகார பத்திரம் தயார் செய்தது வழக்கறிஞர் திரு.சிவராமன். வா.சா.ஆ.1 அதிகார பத்திரத்தில் ராஜ்குமாரும், பிரபாகரனும் சாட்சி கையொப்பம் இட்டிருக்கிறார்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் ராஜ்குமார் மற்றும் பிரபாகரன் ஆகிய இருவரையும் கூப்பிட்டு சாட்சிகளாக விசாரித்தால் எல்லா விவரங்களும் தெரியவரும் என்றால் சரிதான். ஆன்டனி சேவியர் பாக்கியத்தின் இறப்பு சான்றிதழுக்காக தாக்கல் செய்த மனுவில் மேற்படி இரு சாட்சிகள் தான் கையொப்பமிட்டு இறப்பு சான்றிதழ் பெறப்பட்டிருக்கிறது என்றால் அவர்கள் இருவரும் கையொப்பம் இட்டார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க 3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

2006 ஆம் ஆண்டு எனக்கு கொடுக்கப்பட்ட அதிகார பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையான ரூ.பத்து லட்சம் எப்படி கொடுக்கப்பட்டது என்றால் 15 ஆண்டுகள் ஆனதால் எனக்கு இல்லை. மேற்படி தொகையை கொடுப்பதற்கு என்னுடைய குடும்ப உறுப்பினாகள் உதவி செய்தார்களா என்றால் நான் என்னுடைய பணத்தை தான் கொடுத்தேன். நான் 2006 ஆம் ஆண்டு Income tax Assesse ரூ.10 லட்சம் கொடுத்த விவரம் வருமான வரி கண்க்கில் குறிப்பிட்டிருக்கிறேன். அதற்கான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தொகை கொடுத்ததற்கான ரசீது தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ 18 முதல் தகவல் அறிக்கையில் ரூ.45 லட்சம் குறிப்பிட்டுள்ள நிலையில் 2006 கணக்கில் வழங்கப்பட்ட அதிகார பத்திரத்தில் தொகை காணப்படுகின்ற வேறுபாட்டிற்கு காரணம் என்னவென்றால் எனக்கு வழங்கப்பட்ட அதிகார பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தொகை இறுதியானதல்ல. அதனால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரப் பத்திரம் சொத்தினை அபகரிப்பதற்காக என்னால் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றும், அது உண்மையானதல்ல என்று சொன்னால் சரியல்ல. 2006 ஆம் ஆண்டில் நான் அதிகாரப்பத்திரம் வாங்கிய பிறகு 2015 ஆம் ஆண்டில் Vistara housing promoters, என்ற கம்பெனிக்காக விற்பனை பத்திரம் தயார் செய்தேன் என்றால் சரிதான். அந்த விற்பனை பத்திரத்தை பதிவு செய்வதற்காக உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு 9223/2015 என்ற வழக்கையும் வழக்கறிஞர் திரு.சிவராமன் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது எனது

வழக்கறிஞரான சிவராமன் தான் மேற்படி ரிட் மனுவில Vistara housing promoters, என்ற கம்பெனிக்காகவும் ஆஜரானார். என்றால் ஆமாம். எப்படியாவது தாவா சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நானும் என் வழக்கறிஞரும் ஏதாவது தவறான நடவடிக்கை எடுத்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் அதனை நான் மறுக்கிறேன். மேற்படி ரிட் மனு சிவில் வழக்கில் தீர்வு காணுமாறு உத்திரவிடப்பட்டது என்றால் சரிதான். 2006 எனக்கு வழங்கப்பட்ட அதிகார பத்திரத்தினை பெறுவதற்கு முன்பாக அந்த சொத்திற்கான letter of administration, மூல ஆவணங்கள் உள்ளிட்ட ஆவணங்களை சரிபார்த்து தான் வாங்கினேன். 1965 ல் எழுதப்பட்ட கிரயப்பத்திரத்திற்கு முன்னதான ஆவணத்தை பார்தேனா என்றால் அதற்கு முன்பாக அது lay out.`. 1965 ல் எழுதப்பட்ட கிரயப்பத்திரத்திற்கு முன்னதாக உள்ள பத்திரம் இருக்கிறாதா என்றால் இல்லை. ஆனால் 1965 கிரயப்பத்திரம் அதற்கு முந்தைய ஆவண குறித்த விவரம் குறிப்பிட்டுள்ளது. ஒரு சொத்தினை வாங்குவதற்கு முன்னதாக சொத்து சம்பந்தப்பட்ட வில்லங்க சான்றிதழ், பட்டா, சிட்டா ஆவணங்களை சரிபார்க்க வேண்டுமென்றால் சரிதான். அவ்வாறு தான் சரிபார்த்து வாங்கினேன். அவ்வாறு வில்லங்க சான்றிதழை சரிபார்த்த போது வில்லங்க சான்றிதழில் 3 மற்றும் 4வது பிரதிவாதிகள் பெயரில் கிரயமாகி இருந்தது தெரியவந்தது. 2006 ஆம் ஆண்டில் அதிகார பத்திரம் வாங்கிய போது சுவாதீனத்தை நான் எடுக்கவில்லை. 2006 ஆம் ஆண்டில் அதிகார பத்திரம் பெற்ற பிறகு தாவா சொத்திற்கான வருவாய் துறை ஆவணங்களில் என் பெயரை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுத்தேனா என்றால் இந்த வழக்கு நிலுவையில் இருந்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை. என்னிடம் உண்மையான ஆவணங்கள் இல்லாத காரணத்தால் தான் வருவாய்த்துறை ஆவணங்களில் எனது பெயரை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை

என்றும், சொத்தை அபகரிக்க முயற்சி செய்வதாக சொன்னால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள letter of administaraion,. கிரயபத்திரம், அதிகார பத்திரம் இறப்பு சான்றிதழ் ஆகிய ஆவணங்கள் தாவா சொத்தினை அபகரிப்பதற்காக எங்களால் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2006 ஆம் ஆண்டில் அதிகார பத்திரம் பெற்று, 2015 ஆம் ஆண்டில் கிரயம் செய்து கொடுக்க ஆயத்தமான நிலையில் 2019 ஆம் ஆண்டில் காலதாமதமாக வாதிகளுக்காக இந்த வழக்கை நடத்துவதற்கு மனு தாக்கல் செய்தேன் என்றால் வாதிகள் உடல் நலத்துடன் இருந்த வரை அவர்கள் வழக்கை நடத்தினார்கள். உடல் நலம் குறைந்த பிறகு நான் பார்க்கிறேன். ஆன்ரூஸ் சேவியர் பாக்கியம் 1965 ல் கிரயம் வாங்கி 1978ல் இறந்தாக குறிப்பிட்டுள்ள நிலையில் இடைப்பட்ட காலத்திற்கான ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் அவரது உறவினர் இல்லை என்பதாலும் ஆவணங்கள் ஏதும் இல்லாததாலும் தாக்கல் செய்யவில்லை என்றால் உறவினர் இல்லை. ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய வழக்கறிஞர் தான் ஆவணங்களை தயாரித்து என் மூலமாக இந்த வழக்கை நடத்துகிறார் என்றால் சரியல்ல. எனக்கு அதிகார பத்திரம் வழங்கிய முதல்வா; (Principal) க்கு எவ்வித விவரங்களும் தெரியாது என்றும், நான் ஆவணங்களை தயாரித்து சொத்தை அபகரிப்பதற்காக இந்த வழக்கை நடத்துகிறேன் என்றால் சரிதான். successions Certificate என்றால் எனக்கு தெரியும் successions Certificate வாங்காமல் letter of administration வாங்கியதன் காரணம் என்னவென்றால் நீதிமன்றத்தில் விண்ணப்பித்து letter of administration வாங்கி அதை நான் சரிபார்த்து வாங்கினேன். வாதிகளுக்கும், ஆன்ரூஸ் சேவியர் பாக்கியத்திற்கும் என்ன உறவு முறை என்றால் சகோதரி மகள்கள் ஆவணங்களை பார்த்து சரியாக சொல்ல முடியும்.

வாதிகள் ஆன்ரூஸ் சேவியர் பாக்கியத்தின் சகோதரி மகள்கள் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யபட்டிருக்கிறதா என்றால் இல்லை ஆனால் letter of administration தாக்கல் செய்திருக்கிறேன்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க 3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)